Registered as a Newspaper பக்கங்கள் 4 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 11 ( 26 12 93 ) ஞாயிற்றுக்கிழமை ஓசை 311

## போதிய மின்சக்தி இன்மையினால் கழிவகற்றும் வேலையில் சிரமம்

போதிய அளவு மின்சக்தி கிடைக்காமையால் யாழ். போதனா வைத்திய சாலை கழிவகற்றும் வேலை பலத்த சிரமத்தின் மத்தியிலேயே மேற்கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் மின்சக்தி போதாமையினால் பிரேத அறைக்கான குளிர்சாதனங்களும் இயங்காது உள்ள நிலையில் அங்கு வைக் கப்படும் பிரேதங்கள் அழுகி துர்நாற்றம் வீசுவது சர்வசாதாரணமாக உள்ளது. இதனால் அப்பகுதியால் செல்வோர் மட்டுமன்றி விக்டோரியா வீதியால் செல் வோரும் மூக்கைப் பிடித்துக்கொண்டு செல்வதை காணக் கூடியதாக உள்ளது. பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அன்பளிப்பு (3ஆம் பக்கம் பார்க்க)

### [ யுத்தத்தில் ஏற்பட்ட தோல்வியின் எதிரொலி ]

# மக்கள் கிளர்ச்சியை ஒடுக்க

# அவசரகால விதி பிரகடனம்!

## திருவடிநிலை கடலில் மீனவர் மூழ்கி மரணம்

### சடலம் மீட்கப்படவில்லை

(தொல்புரம்)

சுழிபுரம் திருவடிநிலை கடலில் களங்கண்டி வலைத் தொழிலிற்கு சென்ற மீனவர் ஒருவர் கரை திரும்பாததை யிட்டு அவர் கடல்நீரில் மூழ்கி இறந்திருக்கலாம்என அஞ்சப்படுகிறது.

நேற்றுக் காலை திருவடி நிலை கடற் கரையிலிருந்து மூன்று மீனவர்களுடன் சேர்ந்து களங்கண்டி வலைத் தொழிலிற்காக சென்றபோது காரைநகரைச் சேர்ந்தவரும், தற்போது தொல்புரம் வழக்சம்பரை இடம்பெயர்ந்தோர் முகாமில் வசித்து வந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான முருகன் வேலும்மயிலும் (வயது29) என்பவரே கடலில் காணாமல் போயுள்ளார். இவரது சடலத்தினை தேடும் பணியில் மீனவர்களும், சுழி யோடிகளும் அதிதீவிரமாக தேடுதல் நடாத்தியும் நேற்று மாலைவரை சடலம்கிடைக்க வில்லைஎன தெரியவருகிறது.

காணாமல் போனவரும் மற்றைய சகாக்களான சுழி புரம்மேற்கைச்சேர்ந்தமூன்று மீனவர்களும் காலை 9.00 மணியளவில் கரையிலிருந்து கட்டுமரமொன்றில் சென்ற தாகவும், ஏற்கனவே கடல் அலையால் சீர்குலைந்து (3 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

**வடக்கு- கிழக்கில் யுத்தம் ஏற்படுத்தியுள்ள பாதகமான சூழ்நிலையில் தென்னிலங்கையில் மக்கள் அரசிற்கெதிராக கிளர்ந்தெழுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாகவே அரசாங்கம் அவசர கால விதியின் கீழ் அத்தியாவசிய விதிமுறைச் சட்டத்தை அமுல் படுத்தியுள்ளதாக எதிர்க்கட்சியினரும் சுதந்திர பத்திரிகையாளர் சங்கங்களும் குற்றம் சாட்டியுள்ளன.**

மேலும் சிறிலங்கா அரச உயர் அதிகாரிகளுக்கும் சிறிலங்கா ஜனாதிபதிக்கும் எதிராக பத்திரிகைகளாலும், மக்களாலும் தோன்றக்கூடிய எதிர்ப்புக்களை முறியடிப்பதே இச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டதன் நோக்கமாகும் எனவும் சுதந்திர பத்திரிகையாளர் சங்கத்தினர் அரசாங்கத்தை குற்றம் சாட்டியுள்ளனர்.

பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அமுல்படுத்திய இச் சட்டத்தை தற்போதைய ஜனாதிபதி தான் பதவிஏற்று நான்கு மாதங்களின்பின்னர் மீண்டும் அமுல்படுத்தியுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்த தென்னிலங்கைப் பத்திரிகைகள் முற்பட்டபோது அதற்கு வாய்ப்பூட்டு போடுவதாகவே இச் சட்ட அமுலாக்கம் தோன்றுகிறது என சுதந்திர பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

### அவசரகால சட்டவிதி மூலம்

## ஜனநாயக உரிமைகளை அரசாங்கம் பறித்துவிட்டது

## மலைநாட்டைக் காப்பாற்றாவிடின் தலதாவிற்கு செல்லமுடியாது வரும்

### ஆஸ்சிரி மாதுலுவாவே மகாநாயக்கர் எச்சரிக்கை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ''ஈழம்'', மத்திய மாகாணத்தில் ''மலைநாடு'' என்ற நிலையினை ஏற்படுத்தவே தொண்டமான் விரும்புகின்றார். அதற்காக சிங்களவரைமலையகத்திலிருந்து விரட்டி அடிக்க முற்படுகின்றார். இதனை சிங்கள இனம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என ஆஸ்சிரி மாதுலுவாவே மகாநாயக்க தேரோ தெரிவித்துள்ளார்.

'லக்திவ' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் அளித்த பேட்டியில், இன்று நாகதீவுக்கு சிங்களவர்கள் சுதந்திரமாக செல்லமுடியாது. இதே போன்றே நாளை தலதா மாளிகைக்கு போகமுடியாத நிலை ஏற்படும் தொண்டமான் தனது10இலட்சம் வாக்குகளை காட்டி சிங்களஇனத்தை ஏமாற்ற முயல்கின்றார். இதனை சிங்கள இனம் ஒருபோதும்அங்கீகரிக்கக்கூடாது.

சிங்கள பௌத்த மக்களின் நலன்களுக்கு பாதகம் ஏற்படும் எந்த விடயத்தையும் சிங்கள இனம் அனுமதிக்கக் கூடாது. எனவே நாம் அவதானமாக செயற்பட்டு சிங்கள இனத்தைக் காப்பாற்ற சகலரும் முன்வரவேண்டும்.

இன்று ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி ஒரு மலைநாட்டு சிங்களவர். இவரின் காலத்தில் மலை நாட்டில் சிங்கள இனத்திற்கு ஆபத்து வருவதை அவர் அனுமதிக்கக் கூடாது. தொண்டமானை யார் புறக்கணிக்கின்றார்களோ அவர்களை மலைநாட்டில் உள்ள முழுச்சிங்கள மக்களும் ஆதரிக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## 'மார்க்கோ' கப்பலில் விடைத்தாள்கள் செல்லும்

(யாழ்ப்பாணம்)

சென்ற 15 ஆம் திகதிமுடிவடைந்த க. பொ. த சாதாரண தரப்பரீட்சையின் விடைத்தாள்கள் ''மார்க்கோ'' கப்பலில் கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாக யாழ் கல்வித் திணைக்களம் ... கொழும்பிற்கு புறப்பட்டுச் செல்லவுள்ளது.

இன்று புறப்பட்டுச்செல்ல இருக்கும் இக்கப்பல் கால நிலை பாதகமாக இருக்கும் பட்சத்தில் தாமதமாகியே செல்லுமென தெரிவருகின்றது. (பா

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் யுத்தம் ஏற்படுத்தியுள்ள பாதகமான சூழ்நிலையில் தென்னிலங்கையில் மக்கள் அரசிற்கெதிராக கிளர்ந்தெழுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாகவே அரசாங்கம் அவசர கால விதியின் கீழ் அத்தியாவசிய விதிமுறைச் சட்டத்தை அமுல் படுத்தியுள்ளதாக எதிர்க்கட்சியினரும் சுதந்திர பத்திரிகையாளர் சங்கங்களும் குற்றம் சாட்டியுள்ளன.

மேலும் சிறிலங்கா அரச உயர் அதிகாரிகளுக்கும் சிறிலங்கா ஜனாதிபதிக்கும் எதிராக பத்திரிகைகளாலும், மக்களாலும் தோன்றக்கூடிய எதிர்ப்புக்களை முறியடிப்பதே இச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டதன் நோக்கமாகும் எனவும் சுதந்திர பத்திரிகையாளர் சங்கத்தினர் அரசாங்கத்தை குற்றம் சாட்டியுள்ளனர்.

பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அமுல்படுத்திய இச் சட்டத்தை தற்போதைய ஜனாதிபதி தான் பதவிஏற்று நான்கு மாதங்களின்பின்னர் மீண்டும் அமுல்படுத்தியுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்த தென்னிலங்கைப் பத்திரிகைகள் முற்பட்டபோது அதற்கு வாய்ப்பூட்டு போடுவதாகவே இச் சட்ட அமுலாக்கம் தோன்றுகிறது என சுதந்திர பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

## அவசரகால சட்டவிதி மூலம்

# ஜனநாயக உரிமைகளை அரசாங்கம் பறித்துவிட்டது

### சமசமாஜக்கட்சி கண்டனம்

(கொழும்பு)

அவசரகால சட்டத்தின்கீழ் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள விதிகளால் பத்திரிகையாளருக்கு மட்டுமல்ல, ஜனநாயக முறையில் கருத்துக்களை வெளியிடுவதற்கு மக்களிடம் இருந்த உரிமைகளும் அற்றுப் போய்விட்டன என சமசமாஜக்கட்சிப் பொதுச் செயலாளர் பெற்றி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இச்சட்டத்தின்மூலம் அரசாங்கம் தனக்கு எதிரான கோஷங்களை மூடிமறைக்க முற்படுகிறது. இன்று வடக்கு கிழக்கில் யுத்தம் தொடர்கிறது மாகாண சபைகளில் குளறுபடிகள். மேலும்ஏனைய இடங்களில் அரசியல் குளறுபடிகள் காணப்படுகின்றன.

மத்திய, தென் மாகாண சபைகளில் செல்வாக்குச் செலுத்த அரசாங்கம் ஜனநாயகத்துக்கு விரோதமான

(3 ஆம் பக்கம் பார்க்க)

# ஊவா மாகாணசபை ஆட்சியும் எதிர்க்கட்சிகளிடம் செல்லலாம்

### 'ராவய' ஆசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஊவா மாகாண சபையில் நெருக்கடிநிலை தோன்றியுள்ளதாகவும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி வசமுள்ள இம் மாகாணசபை எதிர்க்கட்சிகள் வசம் செல்லகூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

ஊவாமாகாண சபையில் ஐ. தே. கவைச் சேர்ந்த 17 உறுப்பினர்களும் இ. தொ. காவைச் சேர்ந்தமூன்று உறுப்பினர்களும் பொதுமக்கள் முன்னணியைச் சேர்ந்த 10

(3 ஆம் பக்கம் பார்க்க)

## 'மார்க்கோ' கப்பலில் விடைத்தாள்கள் செல்லும்

(யாழ்ப்பாணம்)

சென்ற 15 ஆம் திகதிமுடிவடைந்த க. பொ. த சாதாரண தரப்பரீட்சையின் விடைத்தாள்கள் ''மார்க்கோ'' கப்பலில் கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாக யாழ் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இக்கப்பல் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடிந்ததும் விடைத்தாள்களை ஏற்றிக்கொண்டு கொழும்பிற்கு புறப்பட்டுச் செலவுள்ளது.

இன்று புறப்பட்டுச்செல்ல இருக்கும் இக்கப்பல் கால நிலை பாதகமாக இருக்கும் பட்சத்தில் தாமதமாகியே செல்லுமென தெரிவருகின்றது.

(பா

# தலதாவிற்கு செல்லமுடியாது வரும்

### ஆஸ்சிரி மாதுலுவாவே மகாநாயக்கர் எச்சரிக்கை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ''ஈழம்'', மத்திய மாகாணத்தில் ''மலைநாடு'' என்ற நிலையினை ஏற்படுத்தவே தொண்டமான் விரும்புகின்றார். அதற்காக சிங்களவரைமலையகத்திலிருந்து விரட்டி அடிக்க முற்படுகின்றார். இதனை சிங்கள இனம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என ஆஸ்சிரி மாதுலுவாவே மகாநாயக்க தேரோ தெரிவித்துள்ளார்.

'லக்திவ' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் அளித்த பேட்டியில், இன்று நாகதீவுக்கு சிங்களவர்கள் சுதந்திரமாக செல்லமுடியாது. இதே போன்றே நாளை தலதா மாளிகைக்கு போகமுடியாத நிலை ஏற்படும் தொண்டமான் தனது10இலட்சம்வாக்குகளை காட்டி சிங்களஇனத்தை ஏமாற்ற முயல்கின்றார். இதனை சிங்கள இனம் ஒரு போதும்அங்கீகரிக்கக்கூடாது.

சிங்கள பௌத்த மக்களின் நலன்களுக்கு பாதகம் ஏற்படும் எந்த விடயத்தையும் சிங்கள இனம் அனுமதிக்கக் கூடாது. எனவே நாம் அவதானமாக செயற்பட்டு சிங்கள இனத்தைக் காப்பாற்ற சகலரும் முன்வரவேண்டும்.

இன்று ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி ஒரு மலைநாட்டு சிங்களவர். இவரின் காலத்தில் மலை நாட்டில் சிங்கள இனத்திற்கு ஆபத்து வருவதை அவர் அனுமதிக்கக் கூடாது. தொண்டமானை யார் புறக்கணிக்கின்றார்களோ அவர்களை மலைநாட்டில் உள்ள முழுச்சிங்கள மக்களும் ஆதரிக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# போருக்கான கால அட்டவணை அரசியல்வாதிகளே வழங்குகின்றனர்

### கொழும்பு சஞ்சிகை தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காப் படையினருக்கு புலிகளுக்கெதிரான போருக்கான கால அட்டவணையை அரசியல் தலைவர்களே வழங்குகிறார்கள் எனக் கொழும்பிலிருந்துவெளிவரும் சஞ்சிகை ஒன்று கருத்துக் கூறியிருக்கிறது.

விடுதலைப் புலிகளை அழித்துவிடலாமென காலத்திற்கு காலம் அரசியல் தலைவர்கள் அறிவித்து வருவதுடன், இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அனுமதியையும் அதிகாரிகளுக்கு வழங்கி வருகின்றனர். ஆனால் தமிழர் பகுதிகளை ஆக்கிரமித்துள்ள படையினர் பெருமளவு ஆயுதங்களைக் கொண்டு போராடியுமே அவர்களுக்குக் கொடுக்கப்படும் கால எல்லைக்குள் தமிழீழ விடுதலைப் புலிகளை யுத்தமுனையில்வென்று அவர்களைத் தோற்கடிக்க முடியாத நிலையில் உள்ளனர் என்றும் அச் சஞ்சிகை கருத்து வெளியிட்டுள்ளது

## எறிகணைவீச்சினால் அராலியில் வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினரால் அராலி தெற்குப் பகுதியை நோக்கி ஆட்லறி எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 11 00 மணியளவில் இத் தாக்குதல் மேற் கொள்ளப் பட்டதில் பெரியளவிலான சேதம் எதுவும் இடம்பெறவில்லை. எனினும் மக்கள் பீதியடைந்தனர்

இதே தினம் இரவு பலாலி மற்றும் தீவகப் பகுதிகளிலிருந்து பொன்னாலை, நெல்லியான் பகுதிகளை நோக்கியும் எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சிறிலங்கா இராணுவத்தி

(3 ஆம் பக்கம் பார்க்க)

# வடதமிழீழமெங்கும் பெருமழை தாழ்நிலங்களிலிருந்தோர் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

வடதமிழீழத்தில் மீண்டும் மீண்டும் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் தாழ்வு நிலங்களில் வெள்ளம் நிரம்பி ஓடிக்கொண்டிருக்கிறது.

கடந்த வாரம் பெய்த கடும் மழையினால் ஏற்கனவே தாழ்வு நிலங்களில் வாழும் மக்கள் தமது வீடுகளை கைவிட்டு இடம்பெயர்ந்து சென்றமை தெரிந்ததே.

நூற்றுக்கணக்கான குடிசைகளைக் கைவிட்டு இடம் பெயர்ந்து சென்ற குடும்பங்கள் மீளத்தமது குடிசைகளில் தங்க முடியாத நிலை தொடர்கிறது.

நேற்று பெய்த மழையினால் வழிந்தோடிய பகுதிகளில் மீண்டும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது,

வீதிகள், வளவுகள், பொது இடங்கள் எங்கும் நீர் நிறைந்து காணப்படுகிறது.

யாழ் குடாநாட்டில் தொடர் மழையினால் தமதுஇருப்பிடங்களை கைவிட்டு இடம்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மழையினால் சேதமடைந்த மன்னார் வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பெய்த பெருமழைவெள்ளம் காரணமாகப் பழுதடைந்துபோன மன்னார் - பூநகரி பிரதான போக்குவரத்துப் பாதையினைத் திருத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பல்லவராயன்கட்டுக்குக் குறுக்கே குன்றும்குழியுமாகக் காணப்பட்ட பாதையே தற்போது திருத்தப்படுகிறது இப்பாதை பழுதடைந்துபோனதால் முழங்காவில் பகுதியில் வாழும்மக்களுக்கு நிவாரணப் பொருள்களை எடுத்துச்செல்வதில் பல சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டன. இதனைக் கருத்திற்கொண்டே பொது நிர்வாகத் தொடர்பகம் இப் பாதையைத் திருத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னர் விஜயநகர் பொது நிர்வாகமும், ப. நோ. கூட்டுறவுச் சங்கமும் சேர்ந்து அப் பாதையைத் திருத்தும் நடவடிக்கையினை மேற்கொண்டன. தொடர்ந்தும் கடும் மழை பெய்வதனால் அப் பாதை முற்றாகப் பழுதடைந்துபோனது.

## கடலில் வீசப்பட்ட பெருமளவு மருந்துகள்

(வடமராட்சி)

1995 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் பாவிக்கக் கூடிய குளிசை வகை ஒன்று பருத்தித்துறை கடல்பகுதியில் பெருமளவில் காணப்பட்டது. கடலில் மிதந்து கொண்டிருந்த இக்குளிசைகள் அங்குள்ளவர்களால் மீட்கப்பட்டன.

'பரசிரமோல்' (PARACE TAMOL) என்று சொல்லப்படும் இக்குளிசைகள் கடலில் மிதந்தவண்ணமிருந்தன. யாழ்ப்பாணத்தில் உள்ள பார்மஸி ஒன்றிலிருந்து இக் குளிசைகள் காலம் கடந்துவிட்டதாகத் தெரிவித்து

(3 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு வலயத்தினுள் ஷெல் வீழ்ந்து வெடித்தது

### சிறுமி பலி; இளைஞர் காயம்; வீடுகள் சேதம்

(நமது நிருபர்)

சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த இரவு பாதுகாப்பு வலயத்திற்குள் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலினால் சிறுமி ஒருவர் பலியானதுடன், பாதசாரி ஒருவரும் காயமடைந்தார்.

நேற்று இரவு சுமார் 10-30 மற்றும் 11-30 மணியளவில் மண்டைதீவுப்பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் யாழ். போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள வீடுகள் மீது இரு எறிகணைகளை ஏவினர். பாதுகாப்பு வலயத்தினுள் இது வீழ்ந்துவெடித்ததில் சிவகுமார் கனுஜா (வயது 6) என்ற சிறுமி படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார். மேலும் அவ் வீதியால் சென்றுகொண்டிருந்த மரியதாஸ்ஜெமீன் (23) என்பவர் காயமடைந்தார். இவருக்கு நெஞ்சில்காயமேற்பட்டது. இவர் சிகிச்சை பெற்றபின் வீடு திரும்பினார்.

இச்சம்பவத்தின்போது சுப்பிரமணியம் என்பவரது வீடு பலத்த சேதமடைந்தது. மேற்படி தாக்குதல் நடை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**வெற்றுப்போத்தல்கள் தேவை**

வெற்றுப் போன்விட்டா, மாமைட், வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் மூடியுடனும், ஜாம், புரோட்டினேக்ஸ், பியர் கோடியல் போத்தல்கள் மூடியில்லாமலும் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ், (தனி) லிமிட்டெட் 14 சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (சி 8054)

**தேவை**

காணி வீடு வாடகைக்கு கொடுக்க அல்லது விற்பனை செய்ய விரும்புபவர்களும் வாங்க விரும்புபவர்களும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம். இ. பாஸ்கரன் திருக்குமரன் மங்கள ஏஜன்சி இல. 41 பிரப்பங்குளம் வீதி, வண். பண்ணை யாழ்ப்பாணம். (7046)

யாழ். சிவலிங்க புளியடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில் 2 பரப்பு காணி தேவை. தொடர்பு கொள்ளவும். இ. பாஸ்கரன் திருக்குமரன் மங்கள ஏஜன்சி இல. 41, பிரப்பங்குளம் வீதி, வண். பண்ணை யாழ்ப்பாணம். (7048)

திருமணம்செய்து கொள்ள விரும்பும் சொந்த தொழில் புரியும் 12-ல் செவ்வாய் வயது 34, 4-ல் செவ்வாய் வயது 32 மணமகன்கள் எம்மிடம் உண்டு தொடர்பு கொள்ளவும் இ. பாஸ்கரன் திருக்குமரன் மங்கள ஏஜன்சி 41, பிரப்பங்குளம் வீதி, வண். பண்ணை யாழ்ப்பாணம். (7047)

**சித்தி பெற்றார்**

நவாலி கொத்தணிப் பிரிவில் உள்ள றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையைச் சேர்ந்த மாணவி செல்வி சர்மிளா நற்குணராசா ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 141 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார்

**கால்நடைவளர்ப்போர் சங்கமூலம் நிதியுதவி**

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட கால்நடை வளர்ப்போர் சங்கமூலம் சங்க அங்கத்தவர்களுக்கு கால்நடை வளர்ப்புக்கு நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளதாக யாழ் மாவட்ட கால்நடை வைத்தியர் திரு. மு. தங்க

## நினைவலைகள்



தாயின் மடியில்
30-11-1971

வீரச்சாவு
11-11-1993

**2 ம் லெப். ஈழவேந்தன்**
**(செல்லையா சுந்தரராசன்)**
தவளை நடவடிக்கையில் வீரச்சாவு

ஈழம் எனும் போரினிலே
தானைத் தலைவன் வழிகாட்டலிலே
ஈழவேந்தன் எனும் வேங்கையே
உன் தமிழீழம் எனும் இலட்சியம்
நிறைவேறும் நாள் வெகு தூரமில்லை.

இவருடன் பூநகரியில் வீரச்சாவடைந்தோருக்கும் எமது அஞ்சலிகள்.

ஜெயக்குமார் வீதி,
கோப்பாய் வடக்கு
குடும்பத்தினர், நண்பர்கள்.
(7027)

## நெஞ்சில் நிழலாடும் நினைவலைகள் 46-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
12-10-1972

வீரச்சாவு:
11-11-1993

கடற்புலி
**மேஜர் இளஞ்செழியன்/அலெக்ஸ்**
**(செல்லத்துரை பிரதீபராஜன்)**

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய வேங்கைகளுக்கும் எமது இதய பூர்வமான அஞ்சலிகள்.

தும்பளை,
பருத்தித்துறை.
உற்றார், உறவினர், நண்பர்.
(7028)

## 45-ம் நாள் நினைவஞ்சலி

பூநகரியில் வீரகாவியம்படைத்து வீரச்சாவு எய்திய அனைத்து வேங்கைகளுக்கும் எமது கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செலுத்துகின்றோம்

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்
கைதடி.
(சி-8210)

## 46-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்:
16-04-1977

தாயக மண்ணில்:
11-11-1993

**2-ம் லெப். செந்தில்**
**(மகாலிங்கம் கோகுலன்)**

எதிரிகளின் பாசறையைத் தேடிச் சென்று
சதிகலங்கத் தாக்குதல் தொடுத்த படையணியில்
ஒருவனாகி நின்றே உயர்வு பெற்றாய்
வரும்காலம் முழுதும் உன் நினைவுடன்

எமது மைந்தனின் வீரச்சாவு பற்றி அறிந்ததும் விரைந்து வந்து ஆறுதல் கூறி இறுதி அஞ்சலியில் கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் எம் நன்றி.

26-12-93 இன்று எமதில்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.
26-12-93
குடும்பத்தினர்.
(6932)

## இசைப்பயிற்சி வகுப்புக்கள்

ஓகன் - ORGAN
கிற்றார்- GUITAR
தபேலா- THABELA

ஆகிய வகுப்புக்கள் சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறும்.

ஆரம்பம் : 09-01-94

விபரங்களிற்கு:

***JAFFNA TECHNICAL INSTITUTE***

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றயில்வே கடவை அருகாமை)
(சி-8205)

## 46 ம் நாள் நினைவஞ்சலி

வீரத்தின் வித்தாக
தாய் மடியில்
01.06.1969



விடுதலைவெள்ளியில்
வீராங்கனையாக
11 11.1993

**வீரவேங்கை விடுதலை/குணம்**
**(தங்கவேல் சுசீலா)**

தலைவனின் வழியிலே தாயகக் கனவினிலே
வீறுடன் எழுந்தாய் வேங்கையாய்
பாயும் புலியாகி பல களம் கண்டாய்
ஆனையிறவுச் சமரிலே விழுப்புண்ணும் ஏற்றாய்
மக்களை நசுக்கிய வரை அழிக்கவே சென்றாய்
''ஒப்ரேசன் தவளை'' தாக்குதலில் புலியாக சென்றாய்
மாவீரர் வரிசையில் இணைந்துமே விட்டாய்
இன்றைய தினமதில் உமக்கும்
மண்மீது தலைசாய்த்த மண்ணின் மைந்தர்களுக்கும்
எமது அஞ்சலிகள் உரித்தாக
மண்ணின் மைந்தர்களின் கனவுகள் பலிக்கும்
சுதந்திர தமிழீழம் நிச்சயம் உருவாகும்
உங்கள் பணியினை தொடர்வோம் நாங்கள்

தாய், தந்தை, சகோதரர்கள், குருதேவன்
(போராளி) சகோதரி, மைத்துனி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 45 ஆம் நாள் நினைவில்

## சித்தி பெற்றார்

நவாலி கொத்தணிப் பிரிவில் உள்ள றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையைச் சேர்ந்தமாணவி செல்வி சர்மிளா நற்குணராசா ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில்பரீட்சையில் 141 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார்

## கால்நடைவளர்ப்போர் சங்கமூலம் நிதியுதவி

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட கால்நடைவளர்ப்போர் சங்கமூலம் சங்க அங்கத்தவர்களுக்கு கால்நடை வளர்ப்புக்கு நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளதாக யாழ் மாவட்ட கால்நடை வைத்தியர் திரு. மு. தங்கராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல கால்நடைவளர்ப்போர் சங்கங்களையும் கூட்டி உடன் நடப்பாண்டுக்குரிய நிர்வாக சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்படியும் இன்றுவரை செயற்படாது உள்ள சங்கங்களைக்கூட்டி புனரமைப்புச் செய்யுமாறும் அவர் கூறியுள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு யாழ்.பிறவுண் வீதியில்உள்ள கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்போர் சங்கங்கள்யாவும் தமது சங்கக் கூட்டங்களைக் கூட்டி அறிக்கைகளைச் சமர்ப்பித்து நிதி உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர்தெரிவித்துள்ளார். (24)

## சமயச்சொற்பொழிவு

திருவெம்பாவையை முன்னிட்டு கல்வயல்வேதவனப்பிள்ளையார்ஆலயத்தில் சமய சொற்பொழிவுகள் தினந்தோறும்கல்வயல்இந்து இளைஞர் மன்றத்தால் நடாத்தப்பட்டு வருகின்றது.

## பாராட்டு

(வடமராட்சி)

1993ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் வர்த்தகத்துறையில் நான்கு பாடங்களில் அதிவிசேடசித்தி (4ஏ) பெற்று யாழ். மாவட்டத்தில் முதலாவது இடத்தையும், அகில இலங்கை ரீதியில் ஆறாம் இடத்தையும் பெற்ற ஹாட்லிக்கல்லூரி மாணவன் செல்வன் ஜெகதீசன் ஜெகச்செல்வனை பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றம் பாராட்டி கௌரவிக்கவுள்ளது.

இந்நிகழ்ச்சி மேற்படி மன்ற மண்டபத்தில் இன்று ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும். (யோ)

---



வீரச்சாவு:

11-11-1993

கடற்புலி

### மேஜர் இளஞ்செழியன்/அலெக்ஸ்

(செல்லத்துரை பிரதீபராஜன்)

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய வேங்கைகளுக்கும் எமது இதய பூர்வமான அஞ்சலிகள்.

தும்பளை,
பருத்தித்துறை.

உற்றார், உறவினர், நண்பர்.

(7028)

---

எதிரிகளின் பாசறையைத் தேடிச் சென்று
கதிகலங்கத் தாக்குதல் தொடுத்த படையணியில்
ஒருவனாகி நின்றே உயர்வு பெற்றாய்
வரும்காலம் முழுதும் உன் நினைவுடன்

எமது மைந்தனின் வீரச்சாவு பற்றி அறிந்ததும் விரைந்து வந்து ஆறுதல் கூறி இறுதி அஞ்சலியில் கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் எம் நன்றி.

26-12-93 இன்று எமதில்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.
26-12-93

குடும்பத்தினர்.

(6932)

---

(தங்கவேல் சுசிலா)

தலைவனின் வழியிலே தாயகக் கனவினிலே
வீறுடன் எழுந்தாய் வேங்கையாய்
பாயும் புலியாகி பலகளம் கண்டாய்
ஆனையிறவுச் சமரிலே விழுப்புண்ணும் ஏற்றாய்
மக்களை நசுக்கிய வரை அழிக்கவே சென்றாய்
''ஒப்ரேசன் தவளை'' தாக்குதலில் புலியாக
சென்றாய்
மாவீரர் வரிசையில் இணைந்துமே விட்டாய்
இன்றைய தினமதில் உமக்கும்
மண்மீது தலைசாய்த்த மண்ணின் மைந்தர்களுக்கும்
எமது அஞ்சலிகள் உரித்தாக
மண்ணின் மைந்தர்களின் கனவுகள் பலிக்கும்
சுதந்திர தமிழீழம் நிச்சயம் உருவாகும்
உங்கள் பணியினை தொடர்வோம் நாங்கள்

தாய், தந்தை, சகோதரர்கள், குருதேவன் (போராளி) சகோதரி, மைத்துனி, உற்றார், உறவினர், நண்பர்கள்.

குறிப்பு:- 11.11,93 அன்று பூநகரிச் சமரில் வீரச்சாவெய்திய விடுதலை/குணம் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 26 12, 93 இன்று நடைபெற இருப்பதால் இன்றைய தினம் போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(6974)

---

# 45 ஆம் நாள் நினைவில்...

பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத்தள தகர்ப்பின்போது...

தாயின் மடியில்

25
|
09
|
1966



தாயக மண்ணில்

12
|
11
|
1993

## லெப். கேணல் அன்பு

(பொன்னம்பலம் சரவணபவான்)

அன்பு அண்ணனே!

கானகம் உன்னைக் காதல் செய்ததும்
மானமும் வீரமும் வானள வுயர்ந்ததும்
தேசமும் மக்களும் பாசம் கொண்டதும்
தேசியத் தலைவன் தன்நெஞ்சில் சுமந்ததும்
உண்மை உன் உள்ளத்திலிருந்ததும்
பொய்மை உன் காலில் வீழ்ந்ததும்
புதியவீரர் உன் வழியில் வளர்ந்ததும்
நிமிர்ந்து நடந்து வெற்றிகள் கண்டதும்
பொய்மையும் வெறும் புகழுமல்ல

கர்ம வீரனே!

கதைக்கும் கவிதைக்கும் புதுமை காட்டிட
தமிழுக்கு நாம் அலைகின்றோம்
மலைக்கும் நிலைக்கும் நிகரான சமரொன்றில்
கலக்கம் எதிரியோடு எமக்கும் தந்தாய்
நிலைக்கும் உன் வரலாறு — நீ
வளர்த்த வழியில் விழிப்புடன் நடப்போம்
கடக்கும் பாதையில் வெடிக்கும் புதுமைகள்
துடிப்புடன் சமைப்போம் — நித்தம்
நெஞ்சில் உன் நினைவுகள் ஏந்தி
தொடரும் எம் விடுதலைப்பயணம்.

(7013)

- போராளிகள்

---

# நினைவுகூருகின்றோம்...

1993-12-26

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

❀ **விஜயன்** (ஜோசப் இமானுவேல் - சம்மாந்துறை - அம்பாறை)

❀ **இராசா** (ரெட்ணம் அல்போன்ஸ் - அம்பாறை)

❀ **பீலிக்ஸ்** (சுபாஜி பீலிக்ஸ்டயஸ் - அம்பாறை)

1987ஆம் ஆண்டு இந்தியப் படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிசூட்டில் கொல்லப்பட்ட 03 தமிழ்கடற்றொழிலாளர்கள்.

1990ஆம் ஆண்டு வவுனியா, ஓமந்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். ரமணன்** (யோசப் ஜெயரத்தினம் - புளியம்பொக்கணை - கிளிநொச்சி)

அம்பாறை - சவளக்கடை முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினரால் மட்டு-மண்டூர்ப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட வெல்லாவெளி, விவேகானந்தபுரம் வாசிகள் இருவர் உட்பட 04 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு வவுனியா - செட்டிகுளம் முயல்குத்திப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் நிருபன்** (இராசையா விஜயகுமார் - சாந்தசோலை - வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவுகூருகின்றோம்

❀ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-8194)

### சிந்தனைக்கு

சிங்கக் கூட்டத்திற்கு தலைவனாக ஒரு ஆடு
இருப்பதை விட
ஆட்டு மந்தைக்கு தலைவனாக ஒரு சிங்கம்.
இருப்பதே சிறந்தது
- டேனியல் டீஃபோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-12-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

## ஏன் இந்த முரண்பாடு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவரான அமைச்சர் தொண்டமானுக்கும், அதன் செயலாளர் செல்லச்சாமிக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு அக்கட்சியைப் பிளவுபடுத்தும் நிலைவரை கொண்டுவந்து விட்டுள்ளது. ஆனால், இதன் முடிவு எவ்வாறு அமையும் என்பதை தற்பொழுது அறுதியிட்டுக் கூறமுடியாது விட்டாலும், ஒட்டுமொத்தமாக தமது அதிகாரப் போட்டிக்கும், அபிலாசைகளுக்கும் இவ் இருவரினாலும் மலையக மக்களின் வாழ்வு பலியிடப்பட்டு வருகின்றது என்பதே உண்மையாகும்

ஐக்கிய தேசியக் கட்சியுடனான இருபது வருடத்திற்கு மேற்பட்ட உறவை அமைச்சர் தொண்டமான் முறித்துக் கொள்ள எடுத்த தீர்மானமானது, திட்டவட்டமாக மலையக மக்களின் உரிமைகளை அரசாங்கம் முற்றாகப் புறக்கணித்து விட்டது என்பதினால் எழுந்த முடிவு எனக் கூறமுடியாது. ஏனெனில், மலையக மக்களின் உரிமைப்புறக்கணிப்பு அரசால் தற்பொழுதுதான் ஏற்பட்டது என்பதல்ல. அது பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் ஒன்று.

ஆகையினால், அமைச்சர்தொண்டமான் ஐ தே.க.வுடன் முரண்பட்டுக் கொண்டமையானது கடந்த காலத்தில் அதாவது, ஜே. ஆர்.ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா காலத்தில் தனக்கு கிடைத்த முக்கியத்துவம் புறக்கணிக்கப்பட்டு விட்டது என்பதினாலேயே ஆகும் சுருக்கமாகக் கூறின் டி.பி. விஜேதுங்க அரசு தொண்டமானை புறக்கணித்தமையே ஆகும்.

அவ்வாறு இல்லாது மக்கள் உரிமைக்காகப் போராடுவதென்றால் அமைச்சர் தொண்டமான் முதலில் செய்திருக்கவேண்டியது தமது அமைச்சரவைப் பதவி இராஜினாமாவையே ஆகும். ஆனால் அவர் அவ்வாறு செய்யாமல் காமினி திஸாநாயக்காவுடன் கூட்டுச் சேர்ந்து மத்திய மாகாணசபையை கலைக்க முற்பட்டமை எதற்காக? அதிகாரங்கள் எதுவுமே அற்ற மாகாணசபையில் காமினியை முதல்வராக உட்கார வைப்பதினால் மலையக மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடுமா? அல்லது காமினிதான் இனவாதத்தில் என்ன குறைந்தவரா?

# ஜனாதிபதி தேர்தலில் போட்டி ம.ஐ.மு. விரைவில் முடிவு எடுக்கும்

## தினேஷ் குணவர்த்தனா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக மக்கள் ஐக்கிய முன்னணி விரைவில் முடிவு செய்யும். இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணி எனப்படும் மகா ஜன எக்சத் பெரமுனவின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா கூறியுள்ளார் பாராளுமன்றஉறுப்பினரான இவர் ஐலன்ட் வார இதழுக்கு அண்மையில் வழங்கிய பேட்டியொன்றில் மேலும் குறிப்பிடுகையில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக மக்கள் ஐக்கிய முன்னணி தனது கொள்கைகளையும், சித்தாந்தங்களையும் விரைவில் முன்வைக்கும். இந்த அடிப்படையில் நாட்டில் செயற்படும் ஏனைய சக்திகளோடு பேசப்படும். அதிகாரத்தைக் கைப்பற்றுவதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல், தேசிய ரீதியில் ஒரு மாற்று சக்தியை உருவாக்குவதையே இலக்காககொள்ளவேண்டும். எமது நாடுதான் கொள்கைகளையும் சித்தாந்தங்களையும் அடிப்படையாகக் கொள்ளாத அரசியல்வாதிகளை உருவாக்கிவருகிறது இதன் விளைவாக நாடுமுழுவதும் ஸ்தம்பித நிலைக்கு உள்ளாகி வருகிறது. இந்த நிலையில் தான் நாம் ஒரு புதிய சிந்தனையும், புதிய வேலைத்திட்டங்களும் முன்வைக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறோம் அதற்காகவே நாம் முயல்கிறோம் எனத் தெரிவித்தார்.

பௌத்தத்தின் நலனைப் பேணும் வகையில் எதிர்க்கட்சிகளின்சார்பில் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளராக உங்களை நியமிப்பது தொடர்பாக பேச்சடிபடுகிறதே எனக் கேட்கப்பட்ட போது-

இத்தகைய யோசனை அல்லது கலந்துரையாடல் எதுவும் இடம்பெறுவதாக எனக்குத் தெரியவரவில்லை. எனினும், நாட்டுக்கு இன்று பௌத்தத்தின் நலனைப் பேணக்கூடிய மாற்றுத் தலைமை தேவைப்படுகிறது என்பதை என்னால் உணரமுடிகிறது எனக் குறிப்பிட்டார்.

பௌத்தத்தின் நலனைப் பேணுவதை இலக்காகக் கொண்டு சுதந்திரக்கட்சியை சேர்ந்த சிலர் உங்களது கட்சியையும் இணைத்து பொது முன்னணி அமைப்பது தொடர்பாக முயற்சிப்பதாக கூறப்படுகிறதே எனக் கேட்கப்பட்டபோது கடந்த ஒன்றரை மாதத்திற்கு மேலாகபல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல் சார்பற்ற சக்திகள் மட்டத்தில் பல்வேறு வகையான பேச்சுக்களும் நடாத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் சுதந்திரக் கட்சியை சேர்ந்த சிலரும் ஈடுபட்டிருந்தனர் எனப் பதிலளித்தார்.

முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரியாவுடனும் பேச்சுக்கள் நடத்தப்பட்டதா எனக் கேட்கப்பட்டபோது- அவரை நீண்டகாலம் சந்திக்காத போதும் அவரது கருத்துக்கள் சிலவற்றுடன் ஒத்துப் போக முடியும். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து அமைச்சர்பதவியை தூக்கியெறிந்த அவரது தியாகத்தை நான் மதிக்கிறேன் என்று தெரிவித்தார்.

லலித் அத்துலத்முதலியின் மறைவுக்குப் பின்னர் எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு மற்றும் மாகாண சபை முறை ஒழிப்பு போன்ற விடயங்களை முக்கியத்துவப்படுத்தாமல் இருப்பது துக்ககரமானதே எனினும் இந்த விடயங்கள் தேசிய ரீதியில் மிக முக்கியத்துவம் பெறவேண்டியவை ஆகும் என்றும் மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்தார்.

# பங்களாதேஷில் சீதனக்கொடுமை தினமும் ஒருபெண் உயிரிழப்பு

(டாக்கா)

பங்களாதேஷில் சீதனக் கொடுமையால் தினமும் ஒரு பெண் உயிரிழப்பதாக பங்களாதேஷ் பொலிஸ்திணைக்களம் அறிவித்துள்ளது.

சீதனப் பிரச்சினைகளால் ஒவ்வொரு நாளும் ஒரு பெண் அவரது கணவனாலோ, அல்லது கணவனின் உறவினராலோகொல்லப்படுகிறாள். இந்தப் பழக்கத்தால் பல குடும்பங்கள் நாசமாவதோடு குடும்பங்களுக்கிடையில் நீண்டகாலப்பகைமை ஏற்படுவதாகவும் பொலிஸ் திணைக்களம்தெரியப்படுத்தியுள்ளது.

சிறு விடயங்களுக்குக்கூட மனைவிமார் கொல்லப்படுகிறார்கள் என்று அங்குள்ள பெண்கள் அமைப்பு ஒன்று கவலை தெரிவித்துள்ளது. இவ்வாறான குற்றம் செய்பவர்கள் சட்டத்தைப்பற்றிக் கவலைப்படுவதில்லைஎன்றும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

---

**போதிய**

பொருள்களில் இரண்டு 200 கிலோவாற்று மின்பிறப்பாக்கிகள் உள்ள போதும்கூட அவற்றை இங்கு எடுத்துவர முடியாத நிலைகாணப்படுவதால் இப்பிரச்சினைகள் தோன்றியுள்ளதாக சம்பந்தப்பட்டவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

---

**ஜனநாயக**

**ஊவா**

உறுப்பினர்களும் ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணியைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்களும் உள்ளனர். இவர்களில் இ.தொ. கா. உறுப்பினர்கள் எதிர்க்கட்சிகளிற்கு ஆதரவு வழங்கினால் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் சம பலம் ஏற்படும். சபை முதல்வருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லாமையால் ஆளும்கட்சி தோல்வி அடையக்கூடியநிலை

---

## சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

இம்முறை திருக்கோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ''மார்கோ'' கப்பலில் வந்து சேர்ந்தவர்களை

# மன்மோகன்சிங் ராஜினாமா எதிர்க்கட்சிகள் வரவேற்பு

(டில்லி)

நிதிஅமைச்சர் டாக்டர் மன்மோகன்சிங்கின் ராஜினாமாவை பல்வேறு எதிர்க்கட்சிகள் வரவேற்றுள்ளன.

தொழில் மற்றும்வர்த்தகத் துறையைச் சேர்ந்த பலர் கவலை தெரிவித்துள்ளனர். டாக்டர் மன்மோகன்சிங்கின் பதவிவிலகல் ஏற்றுக்கொள்ளப்பட்டால் நாட்டின்பொருளாதாரத் திட்டம் பாதிக்கப்படும் என்று தொழில் அதிபரும் ஆசிய பசுபிக் தொழில் வர்த்தகத்துறைத் தலைவருமான ஆர். பி. கோயங்கா தெரிவித்துள்ளார்.

பம்பாய் பங்குச் சந்தை மோசடியை விசாரித்த பாராளுமன்றக் கூட்டுக் குழுவின் இந்திரா காங்கிரஸ்உறுப்பினரான மணிசங்கர் ஐயர் தேசிய நலன்கருதி மன்மோகன் சிங்கின் பதவி விலகலை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று பிரதமர் பி. வி. நரசிம்மராவைக் கேட்டுள்ளார்.

அவர்வெளியிட்ட அறிக்கையொன்றில், பாராளுமன்றக் கூட்டுக்குழு சுதந்திரத்துக்குப் பிறகு நிதி அமைச்சகத்தின் செயற்பாடு குறித்துத்தான் குறை சொல்லியிருக்கிறதே தவிர தற்போதைய நிதி அமைச்சரை எந்த விதத்திலும் குறைகூறவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்-

முன்னாள் மத்திய நிதி அமைச்சர் சி சுப்பிரமணியம், முன்னாள் மாநில அமைச்சர் ஆர். ராஜாராம் ஆகியோரும் இதேபோன்ற கோரிக்கைகளைப் பிரதமருக்கு அனுப்பியிருக்கின்றனர்.

தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி மன்மோகன் சிங்கின் பதவி விலகலை வரவேற்றுள்ளார். சென்னையில் செய்தியாளரிடம் பேசிய அவர், பங்குப்பேர ஊழலை விசாரிக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்றக் கூட்டுக்குழு குறை கூறியுள்ள அனைத்து மத்திய அமைச்சர்களும் தார்மீகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்ய வேண்டும் என்று தனது கட்சி கோரிவருவதாக குறிப்பிட்டார்.

# வை. கோ. விவகாரத்தில் விடுதலைப்புலிகள் தலையீடு

## கருணாநிதி குற்றச்சாட்டு

விடுதலைப்புலிகளின் சுற்றறிக்கைகளும், அதற்கு ஆதரவாக வெளியிடப்படும் இதழ்களில் வரும் செய்திகளும் புலிகளினால் தி.மு. க. தலைவர் மு கருணாநிதியின் உயிருக்கு ஆபத்து என்று மத்திய உளவுத்துறை அளித்த தகவலை உறுதிசெய்யும் வகையில் அமைந்திருப்பதாக மு. கருணாநிதி கூறியிருக்கிறார்.

சென்னையில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய அவர் இது தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

கட்சியிலிருந்து விலக்கப்பட்ட மாநிலங்கள் அவை உறுப்பினர் வை. கோபாலசாமிக்கு ஆதரவாக விடுதலைப்புலிகள் தி. மு. க. உள்கட்சி விவகாரத்தில் தலையீடுவதாக மு. கருணாநிதி குற்றம் சாட்டினார்.

# ஆனைக்கோட்டை முகாம் மக்கள் இடம்பெயர்வு

ஆனைக்கோட்டை பகுதியில் உள்ள அகதிமுகாம்களில் தங்கியிருந்த அனைவரும் அண்மையில் பெய்த கடும் மழையினால் முற்றாக இடம் பெயர்ந்துள்ளனர்.

ஆனைக்கோட்டை சந்தி முகாம், அதிகாரிமுகாம், களைஓடை முகாம், அரசடி முகாம், நவாலி தென்னிந்திய திருச்சபை முகாம் ஆகியவற்றில் தங்கியிருந்தவர்களே முற்றாக வெளியேறியுள்ளனர். இம்முகாம் அமைந்துள்ள இடம் மிகவும் பள்ள தில் மூழ்கிவிட்டன. அதே வேளை அங்கிருந்த தற்காலிக மலசல கூடங்களும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

(சி)

## மணிவாசகர்விழா

காரைநகர் மணிவாசக சபையினரால் நடாத்தப்படும் 39-வது மணிவாசகர் விழா எதிர்வரும் 28-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 00 மணியளவில்

தொடர்ந்து வரும் ஒன்று.

ஆகையினால், அமைச்சர்தொண்டமான் ஐ.தே.க.வுடன் முரண்பட்டுக் கொண்டமையானது கடந்த காலத்தில் அதாவது, ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா காலத்தில் தனக்கு கிடைத்த முக்கியத்துவம் புறக்கணிக்கப்பட்டு விட்டது என்பதினாலேயே ஆகும். சுருக்கமாகக் கூறின் டி.பி. விஜேதுங்க அரசு தொண்டமானை புறக்கணித்தமையே ஆகும்.

அவ்வாறு இல்லாது மக்கள் உரிமைக்காகப் போராடுவதென்றால் அமைச்சர் தொண்டமான் முதலில் செய்திருக்கவேண்டியது தமது அமைச்சரவைப் பதவி இராஜினாமாவையே ஆகும். ஆனால் அவர் அவ்வாறு செய்யாமல் காமினி திஸநாயக்காவுடன் கூட்டுச்சேர்ந்து மத்திய மாகாணசபையை கலைக்க முற்பட்டமை எதற்காக? அதிகாரங்கள் எதுவுமே அற்ற மாகாணசபையில் காமினியை முதலமைச்சராக உட்கார வைப்பதினால் மலையக மக்களின் பிரச்சினை தீர்க்கப் பட்டுவிடுமா? அல்லது காமினிதான் இனவாதத்தில் என்ன குறைந்தவரா?

அமைச்சர் தொண்டமான் தனது இழந்து போன அரசியல் முதன்மையை நிலைநாட்ட இவ்வாறு முடிவெடுத்தார் என்றால், செயலாளர் செல்லச்சாமியோ தற்பொழுது உள்ள அதிகாரத்தை இழந்து விடாமல் இருப்பதற்காக மறுவளமாக முடிவெடுத்தார். அவர் முற்றிலும் ஐ.தே.கட்சியின் கைக்கூலியாகவே செயற்பட்டார். அண்மையில் கிடைத்துவரும் தகவல்கள் மூலம் கடத்தப்பட்ட இ.தொ.காவின் ஏழு மாகாண சபை உறுப்பினர்களும் செல்லச்சாமியுடன்சேர்ந்து தமது பதவிகளைக் காப்பாற்ற முயற்சிகளை மேற்கொண்டனர் என்பதே உண்மை என்பது தெரியவருகின்றது.

இந்தவகையில், அமைச்சர் தொண்டமானிற்கும் அமைச்சர் செல்லச்சாமி உட்பட ஏழு மாகாணசபை உறுப்பினர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு என்பது மலையக மக்களின் நலன் பற்றியது அல்ல. தமது பதவிகளையும் அதிகாரங்களையும் காப்பாற்றிக்கொள்வதற்கான வழிமுறையில் ஏற்பட்ட முரண்பாடே ஆகும். அதாவது ஒருவர் தமது எதிர்ப்பைக் காட்டுவதன் மூலம் தமது நிலையைப் பலப்படுத்த முற்பட்டார். மற்றவர்களோ ஒத்துழைப்பு, காட்டிக்கொடுப்பு என்பனவற்றின் மூலம் தமது நிலையைத் தக்க வைத்துக் கொள்ள முயன்றனர்.

இந்நிலையில் கட்சியின் ஒழுங்குவிதிகளை கடத்தப்பட்ட மாகாணசபை உறுப்பினர்கள் மீறினார்கள் என்பதோ, கட்சியில் தொண்டமான் சர்வாதிகாரத்தனமாக நடந்து கொள்ள முற்படுகின்றார் என்றோ குற்றம் சாட்டுவதில் அர்த்தம் எதுவுமில்லை. அதாவது, கட்சியில் தொண்டமான் சர்வாதிகாரியாகச் செயற்படுகின்றார் என்றால் அதன்செயலாளர் அமைச்சர் செல்லச்சாமி ஐக்கியதேசியக் கட்சியின் கைக்கூலியாக கட்சியைக் காட்டிக்கொடுப்பவராக இருக்கின்றார் என்பதே நிஜமாகும். இந்நிலையில் யார்மீது யார்நடவடிக்கைஎடுப்பது?

ஆனால், இவர்களின் அதிகாரப்போட்டியினால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் மலையகத் தமிழ்மக்களே ஆகும். இ.தொ.கா தலைவர்களின் அதிகாரப் போட்டியானது, மலையக மக்களின் பிரச்சினைகளை மறைப்பவையாகவும், அவர்களின் நியாய பூர்வமான உரிமைகளுக்கான போராட்டங்களை மழுங்கடிப்பவையாகவுமே உள்ளன. கடந்த காலத்திலும் இந்நிலையே இருந்துவரினும் இனியும் மலையக மக்கள் இதனை அனுமதிப்பார்களோ? ஆனால், தொடர்ந்தும் அவர்கள் இவ் அரசியல்வாதிகளின் சுகபோகத்திற்கும் அதிகாரப்போட்டிகளுக்கும் வாக்களிப்பவர்களாக மட்டுமே இருக்கமுடியும். இவர்களின் எதிர்காலம் எப்பொழுதும் இருள்மயமானதாகவே இருக்கும்.

---

(டாக்கா)

பங்களாதேஷில் சீதனக் கொடுமையால் தினமும் ஒரு பெண் உயிரிழப்பதாக பங்களாதேஷ் பொலிஸ்திணைக்களம் அறிவித்துள்ளது.

சீதனப் பிரச்சினைகளால் ஒவ்வொரு நாளும் ஒரு பெண் அவரது கணவனாலோ, அல்லது கணவனின் உறவினராலோகொல்லப்படுகிறாள். இந்தப் பழக்கத்தால் பல குடும்பங்கள் நாசமாவதோடு குடும்பங்களுக்கிடையில் நீண்டகாலப்பகைமை ஏற்படுவதாகவும் பொலிஸ் திணைக்களம்தெரியப்படுத்தியுள்ளது.

சிறு விடயங்களுக்குக்கூட மனைவிமார் கொல்லப்படுகிறார்கள் என்று அங்குள்ள பெண்கள் அமைப்பு ஒன்று கவலை தெரிவித்துள்ளது, இவ்வாறான குற்றம் செய்பவர்கள் சட்டத்தைப்பற்றிக் கவலைப்படுவதில்லைஎன்றும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

---

### போதிய

பொருள்களில் இரண்டு 200 கிலோவாற்று மின்பிறப்பாக்கிகள் உள்ள போதும்கூட அவற்றை இங்கு எடுத்துவர முடியாத நிலைகாணப்படுவதால் இப்பிரச்சினைகள் தோன்றியுள்ளதாக சம்பந்தப்பட்டவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

---

### ஜனநாயக

பல திட்டங்களை வகுத்துச் செயற்பட்டுவருகிறது. உறுப்பினர்கள் பலர் கடத்தப்படுகின்றனர். கடத்தப்பட்டவர்கள் நேரடியாக ஜனாதிபதியிடம் கொண்டுசெல்லப்படுகின்றனர்.

இவ்வாறு கடத்தப்படுபவர்களுடன் ஜனாதிபதியே பேரம்பேசி, உறுதிமொழிகளை அள்ளி வழங்குவார். மத்திய மாகாணத்தில் ஏழு பேரும், தென் மாகாணத்தில் ஒருவரும் இவ்வாறு கடத்தப்பட்டு பேரம்பேசி வாங்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கடத்தப்படுபவர்களைப் பொலிசார்கூட தேடமுடியாது என்றார்.

இதேவேளை நவசமசமாஜக் கட்சிப் பொதுச்செயலாளர் விக்கிரமபாகு கருணரத்னா தெரிவிக்கையில்,

மாகாண சபைக்கு அதிகாரங்களைப் பரவலாக்குமாறு விடப்படும் கோரிக்கைகளை நிராகரிப்பதற்கு அவசரகால சட்டவிதிகளைப் பயன்படுத்த அரசாங்கம் முயல்கிறது அரசு தனக்கு ஏற்பட்டுவரும் தொடர்ச்சியான அரசியல் தோல்விகளிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ள இவ்விதிகளைப் பயன்படுத்துகிறது என்றார்.

---

### வட-தமிழீழ

பெயர்ந்து சென்றுள்ள மக்கள் பெரிதும் அவலங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பல குடியிருப்புகள் நீரில் மூழ்கியே காணப்படுகிறது.

இடம்பெயர்ந்து சென்ற குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

---

### கடலில்

'றுகுணு' கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்புவதற்காகஎடுத்துவரப்பட்டன.இக் குளிசைகளைக் கொண்ட பெட்டிஒன்றுகடலில் வைத்து சேதமடைந்ததினால் குளிசைகள் கடலில்மிதந்தன. (யோ)

---

### ஊவா

உறுப்பினர்களும் ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணியைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்களும் உள்ளனர். இவர்களில் இ.தொ.கா. உறுப்பினர்கள் எதிர்க்கட்சிகளிற்கு ஆதரவு வழங்கினால் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் சமபலம் ஏற்படும். சபை முதல்வருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லாமையால் ஆளும்கட்சி தோல்விஅடையக்கூடியநிலை ஏற்படும் என விக்டர் ஐவன் மேலும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்;

அடுத்த ஆண்டு முடிவதற்கு முன்னர் சிறிலங்காவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் ஜனாதிபதி தேர்தல்களில் தனக்குபாதகமான ஒருநிலை ஏற்படும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இதனால் தனக்கு தலையிடியாக உள்ள மாகாணசபைகளை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் முற்படுகிறது.

இ.தொ.கா மாகாணசபையில் எதிர்க்கட்சிகளுடன் இணைந்துள்ளதைத் தொடர்ந்து அரசாங்கம் பீதி அடைந்துள்ளது மிகவும்தெளிவாக தெரிகின்றது.

இதற்காக தொண்டமானுடன் மேற்கொண்ட சகலபேச்சுக்களும் முறிவடைந்த நிலையில் உள்ளது. இதனால் தொண்டமானுக்கு எதிரான கொள்கையை முன்னெடுத்து செல்வதில் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது. இதற்காக அக்கட்சியில் இரண்டாவது பதவி வகிக்கும் எம். எஸ். செல்லச்சாமியை பாவித்துஇ.தொ.காவை இரண்டாகபிரிக்கும்ஓர்கபடநாடகத்தை மேற்கொண்டுள்ளது.

செல்லச்சாமிக்கு தமிழ் மக்கள் வாழும் கொழும்பும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் மட்டுமே செல்வாக்கு உள்ள போதும் தோட்ட தொழிலாளர் மத்தியில் இவர்செல்லாத காசு. இந்தநிலையில்அரசாங்கம் இக்கட்டான நிலையையே சந்திக்கும்.

எதிர்க்கட்சி ஆட்சியுள்ள மூன்று மாகாண சபையுடன் மேலும் இரு மாகாணசபை எதிர்க்கட்சியிடம் போகும் சாத்தியக்கூறு தென்படுகின்றது. இவ் மாகாண சபை தனது சொத்துக்களையும், செல்வாக்குகளையும்அரசாங்கத்திற்கு எதிராக பாவிக்கும் என்ற பீதியினால் இவற்றைச் சீர்செய்ய அல்லது களைந்துவிடும் கொள்கையில் அரசு செயல்படுகின்றது என்றார்.

---

## சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

இம்முறை திருக்கோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ''மார்கோ'' கப்பலில் வந்து சேர்ந்தவர்களை யாழ் அரச அதிபர் கா மாணிக்கவாசகர் தன்னைச் சந்திக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இவர்கள் யாழ் அரச அதிபர் பணிமனையில் அலுவலக நேரத்தில் சந்திக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். (பா)

## 70 வீத மாணவர்கள் பரீட்சையில் சித்தி

அண்மையில் வெளிவந்த க. பொ. த உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி யூனியன் கல்லூரியில் சகல பாடங்களிலும் 70 சதவீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

பௌதிகவிஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய நான்கு பிரிவுகளிலும் இப்பெறுபேறுகள் கிடைத்தன. சில பாடங்களில்100சதவீதமான மாணவர்களும்சித்திபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

### திருவடி

காணப்பட்ட வலைகளை மூவரும் கடலினுள் இறங்கி சீர்செய்துவிட்டு முற்பகல் 11 30 மணியளவில் ஒருவர் பின் ஒருவராக கரையைத் தேடி நீந்தி வந்ததாகவும், ஒருவர் கட்டுமரத்தை கரை சேர்த்ததாகவும், நீந்தி கரை சேர்ந்த இருவரும் திரும்பி பார்த்தபோது தம் பின்னால் நீந்தி வந்த வேலும்மயிலும் காணாமல் போனதையிட்டு மீண்டும்தேடிப்பார்த்தபோது அவரைக் காணாததையிட்டு அவர் கடலில் மாண்டுபோயிருக்கலாம் என எண்ணுவதாக சகமீனவரான பா. மதனகோபால் (வயது20) என்பவர் நமது நிருபருக்கு தெரிவித்தார். (20) (41)

---

### எறிகணை

னரால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆட்லறி எறிகணைத் தாக்குதலில் நெல்லியான் பகுதியில் க. செல்வம் என்பவரது வீடு சேதமடைந்தது.

---

... குற்றம் சாட்டினார்.

# ஆனைக்கோட்டை முகாம் மக்கள் இடம்பெயர்வு

ஆனைக்கோட்டை பகுதியில் உள்ள அகதிமுகாம்களில் தங்கியிருந்த அனைவரும் அண்மையில் பெய்த கடும் மழையினால் முற்றாக இடம் பெயர்ந்துள்ளனர்.

ஆனைக்கோட்டை சந்தி முகாம், அதிகாரி முகாம், களைஓடை முகாம், அரசடி முகாம், நவாலி தென்னிந்திய திருச்சபை முகாம் ஆகியவற்றில் தங்கியிருந்தவர்களே முற்றாக வெளியேறியுள்ளனர். இம்முகாம் அமைந்துள்ள இடம் மிகவும் பள்ளமாக இருந்தமையால் குடிசைகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கி விட்டன. அதே வேளை அங்கிருந்த தற்காலிக மலசல கூடங்களும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (சி)

## நிறைவு

கடந்த 22-ம் திகதி தொடக்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யாழ் மாவட்ட மாணவர்களுக்கான சைவ நெறித் தொண்டர் பயிற்சி நாளை திங்கள் காலை 9.00 மணிக்கு சான்றிதழ் வழங்கல் வைபவத்துடன் நிறைவெய்துகின்றது. மாணவர்கள் அனைவரும் யாழ் இந்துக் கல்லூரியிலும் மாணவிகள் யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் வதிவிடப் பயிற்சியை மேற்கொண்டுள்ளனர் இந் நிகழ்ச்சி நிறைவுறும் நாளை காலை 9.00 மணிக்கு மாணவர்களை பெற்றோர்கள் வருகை தந்து அழைத்துச் செல்லுமாறு யாழ் தெற்குவலய கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மணிவாசகர்விழா

காரைநகர் மணிவாசக சபையினரால் நடாத்தப்படும் 39-வது மணிவாசகர் விழா எதிர்வரும் 28-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 00 மணியளவில் சித்தன்கேணி சிவகாமி சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் பண்டிதர் மு. சு வேலாயுதபிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெறும். நல்லை குரு மகா சந்நிதானத்தின் ஆசியுரையும், திரு.கு.கதிரவேலு (இளைப்பாறிய அதிபர்), திரு. த சிவகுமாரன் (காரை கம்பன் கழக அமைப்பாளர்) ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

இச்சபையினால் நடாத்தப் பெற்ற சமய பாடப்பரீட்சையில் முதன்மைச் சித்திபெற்ற 45 மாணவர்களுக்குப் பரிசில்களும், இரு மாணவர்களுக்குத தங்கப்பதக்கமும்வழங்கப் படவுள்ளன.

---

### பாதுகாப்பு

பெற்றதைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் அச்சமடைந்து வீடுகளை விட்டு இரவிரவாக வெளியேறிய வண்ணமிருந்தனர். (ச, நி, 22

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 25-12-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11750

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;-

27-5775, 27-1939, 24-8714, 26-3321, 26-5281, 24-6215, 41-9977, 41-2979, 28-6996, 26-547, 41-9211, 41-7563, 27-6439, 26-0763, 26-2297, 28-1928, 27-7750, 24-6533, 27-9779, 27-5734, 27-9489, 26-1583, 26-3812, 41-5417, 27-8754, 43-3576.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-5046, 26-1221, 42-6037, 41-5375, 42-0643 26-7901, 28-2810, 41-5614, 24-4361, 26-3667 41-0534, 26-9745, 28-2341, 26-2650, 24-2432 28-7704, 28-6853, 26-2692, 27-6139, 26-1207 27-9161, 42-2383, 26-1644, 26-6782, 26-2963 41-9200, 41-9643, 26-6199, 26-8155, 26-4915.

யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## விசேட பொதுச் சபைக் கூட்டம்
## 28-12-1993

பெருமழை காரணமாக பின்போடப்பட்ட யாழ்ப்பாணம் பல நோ. கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 28.12 93 செவ்வாய்க் கிழமை (போயா தினம்) காலை 10 00 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும் என்பதை பொதுச் சபை உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகிறோம்.

அன்பர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் எமது கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக.

கூட்டுறவுச் சேவையிலுள்ள

சொலமன் சூ சிறில் — தலைவர்
திருமதி பு. நவரட்ணம் — செயலாளர்

(சி-8209)

## 45-ம் நாள் நினைவலைகளில்



வீரவேங்கை
**நாராயணன்-தயாபரன்**
(சிவநாயகம் சிவமோகன்)

தாயின் மடியில் மலராக
26-09-1974

தமிழீழ மண்ணில் வித்தாக
12-11-1993

பாரிலே சிவமோ கனனாய் உதித்துப் பின் புலியில்
சேர்ந்து
பேரினை நாராயணனாய் மாற்றியே மாற்றானோடு

## பாதுகாவலர்கள் வெற்றிடம்

கைத்தொழில்வர்த்தகர்சங்கம் சாவகச்சேரி

எமது சங்க எல்லைக்குட்பட்ட வியாபார ஸ்தாபனங்களை இரவு பாதுகாப்பு செய்வதற்கு தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**தகைமை:-** தென்மராட்சியை இருப்பிடமாக கொண்டவராயிருத்தல் வேண்டும்

**வயது:-** 20வயதுக்குமேற்பட்டவர்ரூபா—10000/- பிணைப்பணம் கட்டக் கூடியவர்

30-12-93 மாலை 3 30 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் நேரில் சமுகம் தரவும்.

கைத்தொழில்வர்த்தகர்சங்கம் சாவகச்சேரி
(7019)

## பாலர் ஆசிரியர் பதவி

- பாலர் ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- கற்பித்தல் அனுபவம் உடையவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு: 30-12-1993**

- அதிபர்.

ESTD:-1973 REGD:-No J/7993
**The Express Institute**
IRUPALAI - KOPAY

(சி-8212)

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா நத்தார் வெகுமதி!

சுவைதேடும் சுவைப்பிரியர்களுக்கு வழங்கும்
சுவையான செய்தி

**லம்பாரிஸ் புரியாணி** விலை ரூ.50/- மட்டுமே

மற்றும் உணவு வகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்
வழமையான உணவுப் பார்சல்கள்
மரக்கறி, மீன், இறைச்சி

தினமும்
முற்பகல் 11.45 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலைத்தேய, கீழைத்தேய
உணவு வகைகளுக்கு

ஜோ. எகட்டனின்
**ஜெசித்தாரா,**

## 90-ம் நாள் இதய அஞ்சலியும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



2-ம் லெப்.
**காந்தரூபன்**
(சேனாதிராசா ஜெயகாந்தராசா)
(12-ம்வட்டாரம்மயிலிட்டி)

பிறப்பு:
**31-03-1976**

வீரச்சாவு:
**28 09-1993**

தாயினும் மேலாம்
தாய்நாடு என்றாய்
தமிழர்தம்விடுதலையே
உணர்வாய்கொண்டாய்
தமிழினத்திறகாகவே
சாவையும்
ஏற்றாய்- அன்பாலே
தமிழ்ப்பண்பாலே
கவர்ந்தவனே
காந்தரூபா-நீயும்
வீழ்ந்து தொண்ணூறு
நாட்கள் தான் என்ன
தொண்ணூறுவருடங்கள்
ஆனாலும் உன்நினைவு
அழியாது-உனை நினைத்து
நாம் கலங்கியே
நின்றாலும்-புலிவீரனே
அமைதியாக தூங்கு
நாளை விடிகின்றபோது-நீ
செஞ்சூரியனாய் எழுவாய்
அப்போது இந்த மண்
மாவீரராம் உங்கள்
முன்-தலை
நிமிர்ந்து நிற்கும்

26-12-93 (இன்று) மதிய போசனத்தில கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்.

தற்போதைய முகவரி
திரேசம்மாள்கோவிலடி,
சூராவத்தை,
சுன்னாகம். (7049)

தென்மராட்சி உ. அ. அ. பிரிவில்

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்வழங்க ஏற்பாடு

(தென்மராட்சி)

வெள்ளத்தால் தென்மராட்சி உதவி அரசாங்க அதிபரின் பிரிவில் பாதிக்கப்பட்டு பொது இடங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு உலர் உணவு வழங்கப்படுகின்றது,

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபரின் பணிப்பின் பேரில் சாவகச்சேரி சமூக சேவை. உத்தியோகத்தர் திரு. கே. சண்முகலிங்கம் தென்மராட்சிப் பகுதியான மிருசுவில், எழுதுமட்டுவாழ், வரணி கச்சாய், நாவற்காடு கொடிகாமம் ஆகிய பகுதிகளில் உள்ள பொதுஇடங்களில் தங்கியுள்ள மக்களை நேரில் பார்வையிட்டார் நிவாரணங்களை துரிதமாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் தெரிவித்தார். இவ் நிவாரணங்கள் பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன, (86)

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
யாழ்நகர் **ஸ்ரீதர்** திரையரங்கில்

விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தினரும்
நிதர்சனமும் இணைந்து வழங்கும்

## சின்ன விழிகள்

இதனுடன் காந்தரூபன் அறிவுச்சோலையை
தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால்
திறந்து வைக்கும் நிகழ்வும், பூநகரிச்சமர்

## ஒளிவீச்சு

சகலகாட்சிகளுக்கும் காண்பிக்கப்படுகின்றது.
தினசரி பி. ப. 4-00 மணி. மாலை 6-00 மணி
சனி, ஞாயிறு காலை 10.00, பி ப. 2.30,
மாலை 4.00, 6.00 மணி
(சி-8217)

## முக்கிய அறிவித்தல்

25-12-93 சனிக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 19-01-94 புதன்கிழமை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச
வர்த்தகர் சங்கம்

968, பருத்தித்துறை வீதி
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.
(சி 8207)

## பதவி வெற்றிடங்கள்

பதவிகள்:-

(1) கணக்காளர்
(2) களஞ்சியப் பொறுப்பாளர்



வீரவேங்கை

## நாராயணன்-தயாபரன்

(சிவநாயகம் சிவமோகன்)

தாயின் மடியில் மலராக 26-09-1974

தமிழீழ மண்ணில் வித்தாக 12-11-1993

பாரிலே சிவமோ கனனாய் உதித்துப் பின் புலியில் சேர்ந்து
பேரினை நாராயணனாய் மாற்றியே மாற்றானோடு
போரினைச் செய்தவீராசுவர்க்கத்திற்சேர்ந்திட்டாயோ?
காரினைக் காணாத் தோகை போலவே கவல்கின்றோமே

இவருடன் பூநகரி - நாகதேவன்துறைக் கூட்டுப் படை இராணுவமுகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த அனைத்துமாவீரர்களுக்கும்எமது அஞ்சலிகள்

கோப்பாய் மத்தி,
கோப்பாய். (6954)

என்றும் உமது நினைவுடன்
குடும்பத்தினர், உறவினர்கள்

## 46-வதுநாள் நினைவஞ்சலி

பிறப்பு 26 — 5 — 1974



வீரச்சாவு 11 — 11 — 1993

## லெப்டினன்ட் நிலவேந்தன் [நடேஸ்வரன்]

(சுப்பிரமணியம் கண்ணன்)

புலோலி

பள்ளிப்பருவத்தில் பாங்கான கல்வியை
பாதியிலே கைவிட்டுச்சேர்ந்தாயே
பாசமிகு அன்னை பாரினிலே
பட்டதுயரையும் மறந்து சேர்ந்தாயே
இன்று படும்துயரை நீ அறியாயோ
பயிற்சி முகாமிலே உன்திறமையினால்
வேவுப்படைப்பொறுப்பை ஏற்று
பூநகரி வெற்றிப் போரிலே வீரச்சாவெய்தினாயோ
பாசமிகு நினைவலைகள் பறந்துன்னை நாடுதையா.

இவருடன் வீரச்சாவெய்திய சக போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.

இன்று 26 ம் திகதி இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு சக போராளிகளையும், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஜோனிவீதி,
புலோலிதெற்கு,
புலோலி
26-12-1993

சு. சரஸ்வதி
(தாய்)

(7033)


**லம்பாரிஸ் புரியாணி** விலை ரூ.50/- மட்டுமே

மற்றும் உணவு வகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்
வழமையான உணவுப் பார்சல்கள்

மரக்கறி, மீன், இறைச்சி

தினமும்
முற்பகல் 11.45 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலைத்தேய, கீழைத்தேய
உணவு வகைகளுக்கு

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா,

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,

சுண்டுக்குளி

புது யுகத்தில் புது உருவம் ஜெசித்தாரா

(சி-8186)


## 46-ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு:
31-10-71

வீரச்சாவு:
11-11-93



## லெப். தணிகை வேலன்

கந்தசாமி கிருபாகரன் (ராஜன்)

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்

காலமகள் வரைந்திட்ட சிற்பமென திகழ்ந்தாய் இல்லத்தின் சிறப்புக்காய் வித்திட்ட உன் வாழ்க்கைப் பாதையில் புதிய பாதை தென்பட்டதோ தலைவர் பிரபாகரனின் தூய புரட்சி வழி நடத்தலில் உற்றாரையும் உறவினரையும் நண்பரையும் மறந்தனையோ

நாட்டின் விடுதலைக்காய் களம் புகுந்தனையோ பழகி வந்த உன் புதியமுகம்

வீரனாகி களம்பல புகுந்து கலைகள் பல அறிந்து திறம் என மணலாற்றில் வீரனாய்த் திகழ்ந்தாய் ஆனையிறவு தகர்ப்பில் உன் தீரத்தை வெளிப்படுத்தினாய். பூநகரி ஒப்ரேசன் தவளையில் தவளையாய் வீறுகொண்ட வேங்கையாய் உன் இலட்சியப் பாதையில் இறுதியில் களமாடி மாவீரனானாய்.

46-ம் நாள் நினைவு நாளாய்ப் போயினும் 46 யுக காலம் உன் நினைவலைகள் எம்மை விட்டகலாது வாட்டுகிறதே எங்கேகாண்போம் உன்எழிலுருவத்தை உன் ஆத்மா சாந்தி பெற எம் இதயங்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றன உன்றோஜா இதழ் வாடினாலும் தமிழீழத்தில் சுதந்திர இதழ் மலரும் நாள் நெருங்கி விட்டது

(7043)

தணிகைவேலன்
குடும்பத்தினர்

நின்றாலும்-புலிவீரனே
அமைதியாக தூங்கு
நாளை விடிகின்றபோது-நீ
செஞ்சூரியனாய் எழுவாய்
அப்போது இந்த மண்
மாவீரராம் உங்கள்
முன்-தலை
நிமிர்ந்து நிற்கும்

26-12-93 (இன்று) மதிய போசனத்தில கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைககின்றோம்.

-குடும்பத்தினர்.

தற்போதைய முகவரி
திரேசம்மாள்கோவிலடி,
சூராவத்தை,
சுன்னாகம். (7049)

## மரண அறிவித்தல்

### சங்கரன் கிருஷ்ணன்

கம்பர்மலை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சங்கரன் கிருஷ்ணன் அவர்கள் 25-12-93 அன்று காலமானார். அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும். ரூபசௌந்தரி, ரஞ்சிதமலர், இராஜேந்திரன் (பொறியியலாளர் லண்டன்), புவனேஸ்வரலிங்கம் (கனடா). பாஸ்கரதாஸ் (பொறியிலாளர், லண்டன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், க. தங்கவடிவேல் (முன்னாள் ஆசிரியர் உ அ மி. கல்லூரி), சீ. நடேசு. ஜெயராணி (லண்டன்), பிரேமாவதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சௌந்தரதாஸ் (M A. டென்மார்க்), முரளிதாஸ் (ஆசிரியர் டென்மார்க்), ராதா (B Music IND), சுஜாதா (B. SC.) சுரேந்திரதாஸ் (பொறியியல் மாணவன் லண்டன்). சுரதா, தங்கேஸ்வரி (டென்மார்க்), கலாமோகன் (பொறியியலாளர், லண்டன்), ஜெபரூபன், நிலாநீ (கனடா), மதுருனி, ஜெபராசா (U K-), தினேஸ்ரூபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஊரிக்காடு மயானத்தில் இன்று (26-12-93) காலை 10 மணியளவில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றனர். தகவல்:

சீ. நடேசு (மருமகன்)
சத்திரங்கை, கம்பர்மலை
வல்வெட்டித்துறை (7051)

நல்லூர் பிரதேச
வர்த்தகர் சங்கம்

968, பருத்தித்துறை வீதி
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(சி 8207)


## பதவி வெற்றிடங்கள்

பதவிகள்:-

(1) கணக்காளர்
(2) களஞ்சியப் பொறுப்பாளர்
(3) காசாளர்
(4) விற்பனையாளர்

தென்மராட்சிப் பகுதியில் உள்ள வியாபார நிறுவனத்திற்கு மேல்வரும் பதவிகளுக்கு வெற்றிடம்உண்டு.

ஆர்வமுடையோர் சாவகச்சேரி நிதித்துறையின் வருவாய்ப்பகுதி அலுவலகத்தில் சகல சான்றிதழ்களுடனும் 28-12-93 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிககு நேரில் சமுகமளிக்கவும்.

அனுபவம் உடையவர்களுக்கு
முன்னுரிமை வழங்கப்படும்

நிர்வாகி

(சி-8216)

சேரன் பல்பொருள் வாணிபம்.


## மரண அறிவித்தல்

### முருகேசு தியாகராசா

காரைநகர், களபூமி. சத்திரந்தையைச் சேர்ந்தவரும், தற்போது கொக்குவிலில் வசித்தவருமாகிய முருகேசு தியாகராசா காலமானார்.

அன்னார் வாரியப்பொல முன்னாள் வர்த்தகரும், வாழைப்பழம் கந்தையாவின் மருமகனும், நீலாம்பிகையின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம், கனகம்மா ஆகியோரின் சகோதரரும், பரமேஸ்வரி பரமநாதனின் (சுவிஸ்)மைத்துனரும் நவமணிதேவி, சிவசுப்பிரமணியம், கமலாதேவி, சற்குணராசா (ஜேர்மனி), உமாதேவி (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கோப்பாய்). சத்தியதேவி, தேவயோகேஸ்வரி (தொழில்நுட்பக் கல்லூரி), அம்பிகாவதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நடராசா, உலகநாதன் (சந்திரன்). மல்லிகாதேவி ஆகியோரின் மாமனாரும், சுகந்தன், சுகன்யா, கௌசிகன், ஜனகன். பிரபாகரன், தாட்சாயினி, சிந்துஜா, பவித்திரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு

(7042)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது